அ.வ.எண். 99/15

பெயர் – சுப்புராஜ் (வா.சா.1)

நாள் – 29.07.2022

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை

3, 4 பிரதிவாதிகளான செல்லச்சாமி, சுப்பிரமணியன் ஆகியோர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர்களுக்கான புஞ்சை நிலம் எங்களது புஞ்சை நிலத்திற்கு அடுத்தாற்போல் உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊரான தூங்காரெட்டிபட்டியிலிருந்து லட்சுமியாபுரம் செல்வதற்கு வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான். ஆனால் எங்கள் இடத்திற்குள் கிடையாது. வேறு இடத்தில் உள்ளது. தூங்காரெட்டிபட்டியிலிருந்து லட்சுமியாபுரம் செல்வதற்கு உள்ள வண்டிப்பாதையை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருவதால் 3, 4 பிரதிவாதிகள் அந்த ஆக்கரமிப்பை அகற்றிக் கொடுக்குமாறு கேட்டார்கள் என்றால் 3, 4 பிரதிவாதிகள் அதுசம்பந்தமாக புகார் கொடுத்து விஏஓ பார்வையிட்டு பட்டா இடத்தில் நாங்கள் விவசாயம் செய்வதாக சொல்லிவிட்டார். சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சர்வேயர் மற்றும் விஏஓ ஆகியோர்கள் வந்து சர்வே எண்.48/2 மற்றும் 52/1ல் 10 செண்ட் நிலத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து அதில் அகத்தி பயிரிட்டுள்ளதாகவும், அதனை அகற்றிக் கொடுக்க வேண்டுமென்று எனக்கு அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் 60 ஆண்டு காலமாக பயிர் செய்து வருகிறோம். சர்வே எண்.48/2 மற்றும் 52/1 ல் வண்டிப்பாதை இல்லையென நிரூபணம் செய்வதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் தேவைப்பட்டால் மனு செய்யத் தயாராக உள்ளேன். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிட்டால் உண்மை நிலவரம் என்னவென்று நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு பார்வையிட்டால் சர்வே 48/2 மற்றும் 52/1ல் வண்டிப்பாதை இருப்பது நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளான செல்லச்சாமி மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர்கள் அவர்கள் இடத்தில் பட்டாசு தொழிற்சாலை எதுவும் அமைக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.48/2 மற்றும் 52/1 ல் உள்ள வண்டிப்பாதையை எங்கள் ஊர் பொதுமக்கள் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து 45 ஆண்டு காலமாக யாரும் பயன்படுத்தவில்லை. தூங்காரெட்டிபட்டி கிராமத்திலிருந்து லட்சுமியாபுரம் கிராமம் செல்லும் பட்டா நில உரிமையாளர்களுக்கு சர்வே எண்.48/2 மற்றும் 52/1 ல் உள்ள வண்டிப்பாதையை தவிர வேறு பாதை எதுவும் இல்லையென்றால் சரியல்ல. எங்கள் நிலத்திற்கு கிழக்கே 21 அடி அகல மண் ரோடு உள்ளது. அதற்கும் கிழக்கு பக்கம் தார் ரோடு உள்ளது. தூங்காரெட்டிபட்டி கிராமத்திலிருந்து லட்சுமியாபுரம் செல்வதற்கு நான் சொல்வது போல் மண் ரோடோ, தார் ரோடோ இல்லையென்றால் சரியல்ல. விவசாயப் பணிக்காகவும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் அரசால் ஒதுக்கப்பட்ட 48/2 மற்றும் 52/1 ல் ஒதுக்கப்பட்ட வண்டிப்பாதையை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அதில் வண்டிப்பாதை இல்லையென சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் பிராது மற்றும் நிரூபண உறுதிக்கூற்றில் வழக்கிடைச் சொத்தின் வழியாக தூங்காரெட்டிபட்டி கிராமம் வழியாக லட்சுமியாபுரம் கிராமத்திற்கு செல்ல ஒரு சிறிய வண்டிப்பாதை கிராம வரைபடத்தில் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது எங்கள் சொந்த உபயோகத்திற்காக அமைக்கப்பட்டதாகும். நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கில் சர்வே எண்.48/2 மற்றும் 52/1 ல் வண்டிப்பாதை இருப்பதாக தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் அந்த தவறை சரி செய்வதற்காக நான் உரிய மனு செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.48/2 மற்றும் 52/1 ல் வண்டிப்பாதை இருப்பதாக தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது உண்மையில்லை என்ற காரணத்தினால் தான் நான் தற்போது வரை அதை சரி செய்வதற்காக எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிடைச்

சொத்து எனக்கு எப்போது கிடைக்கப்பெற்றது என்றால் 1999ம் ஆண்டு எனது சகோதரர்களிடமிருந்து கிரையமாக பெற்று, அதன்மூலம் கிடைக்கப்பெற்றதாகவும், அதற்கு முன்பாக எனது அப்பா மற்றும் தாத்தா அனுபவித்து வந்தார்கள். சர்வே எண்.48/2 மற்றும் 52/1ல் தூங்காரெட்டிபட்டி கிராமத்திலிருந்து லட்சுமியாபுரம் செல்வதற்கான வண்டிப்பாதை உள்ளது என்றாலும், அதைத் தான் இன்றளவும் பொதுமக்களும் அந்த வழியில் உள்ள பட்டா நில உரிமையாளர்களும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், மேற்படி சர்வே எண்களில் எனது பட்டா நிலம் வழியாக செல்லும் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து பொதுமக்களுக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அது வண்டிப்பாதை இல்லை. எங்கள் பட்டா இடமாகும். பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து ஆக்கிரமிப்பாளராக இருப்பதால் பிராதில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.